<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR</u>

Sessions Case No. 62/2019

Prosecution witness PW - 6

| | | |
|---|---|---|
| Name | …. | Selvam |
| Father's Name | .... | Thulukanam |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 25th day of September 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது மேல்மட்டை விண்ணமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி என் வீட்டின் அருகில் தான் புகார்தாரர் வீடு உள்ளது. அப்போது போலிசார் வந்து படம் வரைந்து எழுதினார்கள். அதில் கையொப்பமிட சொன்னார்கள். நான் கையொப்பமிட்டேன். எனக்கு தற்போது வருடம் ஞாபகமில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் போலிசார் தட்டச்சு செய்த பேப்பரில் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்தேன். ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

போலிசார் என்னை பெயர் விலாசம் மட்டும் கேட்டார்கள். அதன்பிறகு தற்போது தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். காவல் நிலையத்தில் கையொப்பமிட்டுவிட்டு தற்போது சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

Sessions Case No. 62/2019

Prosecution witness PW - 5

| | | |
|---|---|---|
| Name | …. | Villavankothai |
| Father's Name | .... | Veeraragavan |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 25th day of September 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது வேலூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2018 ஆம் ஆண்டு சம்பவம் மாலையில் நடந்தது. சம்பவத்தின் போது நான் வேலூரில் இருந்தேன். என் அப்பா வீரராகவன் அவரை தாக்கியதாக எனக்கு சொன்னார்கள். எனக்கு என்ன பிரச்சனை என்று தெரியாது ஆனால் எதிரிகள் என் அப்பாவை தாக்கியதாக சொன்னார்கள். வேலூர் அரசு மருத்துவமனையில் என் தந்தையை சேர்த்து ஒரு வாரம் உள்நோயாளியாக இருந்தார். நான் என் தந்தையை மருத்துவமனையில் பார்த்தேன். ஏதோ குப்பை கொட்டுவது சம்மந்தமாக பிரச்சனை என்று சொன்னார். அதில் யார் யாரை அடித்தார்கள் என்று சொல்லவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

29.05.2018 ஆம் தேதி அருந்ததி பாளையத்தில் மாரியம்மன் கூழ்வார்க்கும் திருவிழா நடைபெற்றது. அந்த திருவிழாவிற்கு பிச்சாண்டி வீட்டிற்கு அவரது உறவினர்கள் வந்திருந்தார்கள். மாலை 6.00 மணியளவில் பிச்சாண்டி, அவரது மனைவி குமாரி என்பவர் சாப்பிட்ட எச்சில் இலைகளை ஏன் எங்கள் வீட்டின் மனையில் போட்டிருந்ததை என் அம்மா அம்பிகா சென்று ஏன் சாப்பிட்ட இலைகளை என் வீட்டில் போடுகிறீர் என கேட்டதற்கு குமாரியும் அவரது கணவர் பிச்சாண்டியும் என் அம்மாவை பார்த்து தேவிடியா, வெள்ளாரஓய் என்று அசிங்கமாக திட்டியுள்ளார்கள். அப்போது அங்கிருந்த என் அப்பா சென்று ஏன் அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டார். பிச்சாண்டி மற்றும் அவரது மனைவி குமாரி அவரது மகன் தமிழரசன் 3வரும் சேர்ந்து கல்லால் என் அப்பாவை அடித்து விட்டார்கள் என்றும், என் அப்பாவிற்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டது. இரத்த காயத்துடன் என் அப்பாவும் அம்மாவும் காவல் நிலையம் சென்று தகவல் சொல்லிவிட்டு மருத்துவமனைக்கு செல்வதற்காக வீட்டிற்கு வந்து எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் வீட்டிற்கு வந்தவுடன் இரவு சுமார் 9.30 மணியளவில் வீட்டிற்குள் சென்று காசு எடுத்துவர சென்றபோது பிச்சாண்டி மற்றும் அவரது மனைவி குமார், பிச்சாண்டி மகன் தமிழரசன், பிச்சாண்டி மருமகன் செல்வராஜ் மற்றும் அன்பரசன், பிச்சாண்டியின் தங்கை முனியம்மாள் ஆகிய 6 பேரும் ஒன்று சேர்ந்து கையில் தடி. இரும்பு ராடு, கல் ஆகிய ஆயுதங்களுடன் வந்து பிச்சாண்டி மருமகன் அன்பரசன் கல்லால் என் தலையில் அடித்தான் என்றும், பிச்சாண்டி மகன் தமிழரசன் இரும்புராடால் என் அம்மாவின் பின்பக்க தலையிலும், பிச்சாண்டி மருமகன் செல்வராஜ் இரும்புராடால் என் அம்மாவின் முன் பக்க தலையிலும் அடித்தார்கள். பிச்சாண்டி மருமகன் என் அம்மாவின் தலையில் தடியால் அடித்தான்.

பிச்சாண்டியின் தங்கை முனியம்மாள் என் அம்மாவையும், அப்பாவையும் காலால் எட்டி எட்டி உதைத்தனர். அனைவரும் சேர்ந்து எங்கள் வீட்டு மாட்டுகொட்டகையை கீழேதள்ளி சேதபடுத்திவிட்டனர். பிச்சாண்டியும், தமிழரசனும் இதோடு ஒழிந்துபோங்கடா என்று சொல்லி தமிழரசன் இரும்புராடால் என் அப்பா மற்றும் அம்மாவின் தலையில் அடித்தார்கள். பிச்சாண்டி தடியால் என் அம்மாவின் தலையிலும் என் அப்பாவின் தலையிலும் அடித்தார். என் அப்பா மற்றும் அம்மாவிற்கு இரத்த காயம் ஏற்பட்டது. என் ஊரை சேர்ந்த சுப்ரமணி மகன் ராஜ்குமார் என்பவரும், மண்ணு மகன் குப்புசாமி இருவரும் காயம்பட்ட என் அப்பாவையும், அம்மாவையும் சிகிச்சைக்காக ஆரணி மருத்துவமனையில் சேர்த்து பின்பு மேல்சிகிச்சைக்கா வேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நானும் உடன் சென்றேன். எனக்கு உள்காயம் ஏற்பட்டதால் நானும் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. மேற்கண்டவாறு நான் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.